# பொதுமக்களுக்கான அறிவித்தல்

இலங்கை மத்திய வங்கி, 2019 ஒகத்து 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரியில் தரைத் தளத்தில் அமைந்துள்ள பொதுமக்கள் நாணயக் குற்றி வழங்கும் கருமபீடத்தினூடாக நாணயத் தாள்களை மாற்றும் வசதியினை வழங்குவதற்குத் திட்டமிடுகின்றது.



| | |
|---|---|
| திறந்திருக்கும் தினங்கள் | பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை |
| திறந்திருக்கும் நேரம் | மு.ப 9.00 தொடக்கம் மு.ப 11.00 |
| ஆளொருவருக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச நாணயத் தாள்களின் தொகை | 100 நாணயத் தாள்களைக் கொண்ட ஏதேனும் வகையின் ஒரு பக்கற் (ரூ.20/-, ரூ.50/-, ரூ.100/-, ரூ.500/-, ரூ.1000/-) |

மேலும், மத்திய வங்கியின் தரவுகளின்படி பயன்படுத்த முடியாத ரூ.10 நாணயத் தாள்களின் கணிசமான அளவு சுற்றோட்டத்தில் காணப்படுகின்றது. எனவே, பயன்படுத்த முடியாத ரூ.10 நாணயத் தாள்களை அருகிலுள்ள வர்த்தக வங்கிகளில் அல்லது இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடத்தில் சேதமடைந்த நாணயத் தாள்களை மாற்றும் கருமபீடத்தில் மாற்றிக்கொள்ளுமாறு பொதுமக்கள் இத்தால் வேண்டப்படுகின்றனர்.

இலங்கை மத்திய வங்கியின் சேதமடைந்த நாணயத் தாள்களை மாற்றும் கருமபீடம் பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஒவ்வொரு வார நாட்களிலும் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப 12.30 வரை திறந்திருக்கும்.

**நாணயத் தாள்களின் தூய்மை பேணி கவனமாகப் பயன்படுத்துங்கள்**

மேலதிகத் தகவல்களுக்கு:
கண்காணிப்பாளர், நாணயத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1, இலங்கை
☎ 0112477371/ 0112477130 @ currency@cbsl.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA